வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 19/2021

வழக்கு சாட்சி LW4 / PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரத்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | செல்வம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 32 |

தேதி 14.05.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் விநாயகபுரம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு புகார்தாரரை தெரியாது. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.

கடந்த 07.10.2017ம் ஆண்டு 12.30 மணிக்கு லட்சுமிபுரம் ஜங்ஷன் அருகே வரும்போது அரவிந்த் ராஜ் என்பரை கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி பின்னர் கணேஷ் (எ) ஆட்டோ கணேஷ் அவர் பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஓடினார் என்றும், கணேஷை பிடிக்க முற்பட்டபோது, அவர் கையில் இருந்த கத்தியை தேய்தார் என்றும், அருகில் இருந்த கடையில் இருந்த கூல்டிரிங்ஸ் பாட்டிலை எடுத்து பிடிக்க முற்பட்ட எங்களை நோக்கி வீசினார் என்றும், அதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்றும். மேற்படி கணேஷ் எங்களை பார்த்து யாராவது இதுகுறித்து போலீசில் கபுகார் அளித்தால் அவரின் தலை துண்டாகிவிடும் என்றும், மிரட்டி விட்டு ஓடிவிட்டார் என்றும்,

நான் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.